ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

# திருவாராதனம் – வடகலை

இல்லத்தில் எழுந்தருளியுள்ள பெருமாள் ஸன்னதியின் அருகில் சென்று ந்யாஸதசகம் உச்சரித்தபடி எம்பெருமானைச் ஸேவிக்கவும். இதற்கு அவகாசம் இல்லையென்றால் பின்வரும் அம்ருதச்வாதினி பாசுரத்தைக் கூறவும்:

நின்னருளாங் கதியின்றி மற்றொன்றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்த நிலை கழிந்தேன்
உன்னருளுக்கினிதான நிலை உகந்தேன்
உன் சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்ற நிலை எமக்குத் தீர்த்து
வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை
இன்னருளால் இனி எமக்கோர் பரமேற்றாமல்
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே.

அதன் பின்னர், மணியை ஸேவித்து (அடித்து), மூன்று முறைகள் இரு கரங்களையும் தட்டவும். பின்னர் கீழே உள்ள இராமாயண ச்லோகம் கூறவேண்டும்.

கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நரசார்த்தூல கர்த்தவ்யம் தைவமான்னிகம்

என்று கூறியபடி, பெருமாள் பெட்டியைத் திறக்கவேண்டும். பின்னர் குருபரம்பரை தனியன்களைச் ஸேவிக்கவும். அதாவது – ஓம் அஸ்மத் குருப்யோ நம:, அஸ்மத் பரமகுருப்யோ நம:, அஸ்மத் ஸர்வகுருப்யோ நம:, ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:,

அஸ்மத் தேசிக மஸ்மதீய பரமாசார்யாந சேஷாந் குரூந்
ஸ்ரீமந் லக்ஷ்மண யோகிபுங்கவ மஹாபூர்ணௌ முநிம் யாமுநம்
ராமம் பத்மவிலோசநம் முனிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேநேசம் ச் ரியமிந்திராஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே

என்று கூறவேண்டும். தொடர்ந்து ஆசார்ய பரம்பரை தனியன்களைக் கூறவேண்டும். அதன் பின்னர் அஷ்டாக்ஷர மந்த்ரத்தினால் (ஓம் நமோ நாராயணாய என்பது அஷ்டாக்ஷரம்) பத்து முறை ப்ராணாயாமம் செய்யவேண்டும். அடுத்து – ஸ்ரீபகவதாக்ஞயா ஸ்ரீமந் நாராயண ப்ரீத்யர்த்தம் இஜ்யாங்கம் தசஸங்கியாகம் அஷ்டாக்ஷர மஹா மந்த்ர ஜபம் கரிஷ்யே – என்று ஸங்கல்பம் செய்து, அஷ்டாக்ஷர ஜபம் செய்யவும். தொடர்ந்து, ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே நம்முடைய இல்லத்தில் சாளக்ராமமாக வந்துள்ளதாக எண்ணவும். கீழே உள்ள ச்லோகம் கூறவும்:

கூர்மாதீந் திவ்ய லோகம் ததனு மணிமயம் மண்டபம் தத்ர சேஷம்
தஸ்மிந் த்ர்மாதி பீடம் ததுபரி கமலம் சாமாக்ராஹிணீ ச
விஷ்ணும் தேவீ விபூஷாயுத கணமுரகம் பாதுகே வைநதேயம்
ஸேநேசம் த்வார பாலாந் குமுதமுககணான் விஷ்ணுபக்தாந் ப்ரபத்யே

அடுத்து பெருமாளின் முன்பாக, தனது வலது பக்கத்தில், திருவாராதனைக்கு உரிய பாத்திரங்களை, கீழே உள்ள படத்தில் காண்பித்தது போல் அமைத்துக் கொள்ளவும்.




1. அர்க்யபாத்ரம், 2 பாத்யபாத்ரம், 3 ஆசமனீயபாத்ரம், 4 ஸ்நானீயபாத்ரம்,
5. ஸர்வார்த்ததோய பாத்ரம், 6. ஆசார்யதோய பாத்ரம், 7. ப்ரதிக்ரஹ பாத்ரம்

இதில் உள்ள ஸர்வார்த்ததோய பாத்திரத்தில் – ஏலக்காய், குங்குமப்பூ, பச்சை கற்பூரம் ஆகியவற்றைச் சேர்க்கவும். பின்னர், அந்தப் பாத்திரத்தினை வலது கையால் மூடிக் கொண்டு, ஏழு முறை அஷ்டாக்ஷர மந்த்ரம் கொண்டு ஜபிக்கவும். பின்னர் கீழே உள்ளபடி சுரபி முத்திரை காண்பிக்கவும்.



அடுத்து ஓர் உத்தரணி தீர்த்தம் எடுத்துக் கொண்டு, பெருமாள் முன்பாக மூக்குக்கு நேராகக் காண்பிக்கவும். அந்த தீர்த்தம் எம்பெருமானின் திருவடிகளிலிருந்து பெருகி வரும் கங்கை என்று எண்ணிக் கொள்ளவும். அந்த தீர்த்தம் கொண்டு தன்னையும் ஆராதனை செய்யும் இடத்தையும் ப்ரோக்ஷணம் (தெளித்து) செய்து கொள்ளவும். அதன் பின்னர் பாத்திரங்களில் தீர்த்தத்தைச் சேர்க்கவும். அனைத்துப் பாத்திரங்களிலும் துளசியைச் சேர்க்கவும்.

# திருவாராதன ஆரம்பம்

## மந்த்ராஸநம்

இதம் மந்த்ராஸநம் ஸமர்ப்பயாமி என்று கூறியபடி ஒரு புஷ்பத்தையோ அல்லது ஒரு துளசியையோ பெருமாள் பெட்டியில் சேர்க்கவேண்டும். பின்னர் திருமணியைச் ஸேவித்தபடியே, அர்க்ய பாத்திரத்திலிருந்து ஓர் உத்தரணி நீர் எடுத்துக்கொண்டு, பெருமாளுக்குக் காண்பித்து – இதம் அர்க்யம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி அந்த தீர்த்தத்தை ப்ரதிக்ரஹ பாத்திரத்தில் சேர்க்கவும். இது போன்று பாத்ய பாத்திரத்தில் இருந்து இரண்டு முறை, ஓர் உத்தரணி நீர் எடுத்துக் கொண்டு, இரண்டு முறையும் ப்ரதிக்ரஹ பாத்திரத்தில் சேர்க்கவும். இது போன்று ஆசமன பாத்திரத்தில் இருந்து மூன்று முறை, ஓர் உத்தரணி நீர் எடுத்துக் கொண்டு, மூன்று முறையும் ப்ரதிக்ரஹ பாத்திரத்தில் சேர்க்கவும்.

## திருமஞ்சனம்

அடுத்து ஒரு துளசியை துளையிட்ட தட்டில் – இதம் ஸ்நாநாஸநம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி சேர்க்கவேண்டும். பின்னர் பெருமாளைத் திருமஞ்சன பாத்திரத்தில் ஏளப் பண்ணவும். மணியைச் ஸேவித்தபடி, பின் வரும் புருஷஸூக்த வரிகளைக் கூறியபடி திருமஞ்சனம் செய்யவேண்டும்.

ஹரி: ஓம்
ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்
ஸபூமிம்விச்வதோவ்ருத்வா அத்யதிஷ்டத்தசாங்குலம்
புருஷ ஏவேதகும்ஸர்வம் யத்பூதம் யச்சபவ்யம்
உதாம்ருதத்வஸ்யேசான: யதன்னேநாதிரோஹதி
ஏதாவாநஸ்யமஹிமா அதோஜ்யாகும்ஸ்சபுருஷ:
பாதோஸ்யவிச்வாபூதானி – ஹரி: ஓம்

பின்னர் மேலே கூறியபடி அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் ஸமர்ப்பிக்கவும். பெருமாளை சுத்தமான உலர்ந்த துணி கொண்டு துடைத்து பெட்டியில் ஏளப்பண்ணவும்.

## அலங்காராஸநம்

பெருமாளின் திருமேனியில் – இதம் அலங்காராஸநம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி சந்தனம் பூசவேண்டும். பின்னர் அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் ஸமர்ப்பிக்கவும். தொடர்ந்து – தூபம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி ஸாம்ப்ராணி தூபம் காட்டவும். பின்னர் – தீபம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி, ஒரு பஞ்சுத் திரியை நெய்யில் நனைத்து, மணியை ஸேவித்தபடி, பெருமாள் முன்பாகக் காட்டவும் அல்லது கற்பூரஹாரத்தி செய்யவும்.

## மந்த்ரபுஷ்பம்

துளசி , மலர்கள் முதலியவற்றை ஒரு தட்டில் வைத்து, அதனை எடுத்து ஹரி: ஓம், ஹரி: ஓம் என்று இரண்டு முறை உச்சரிக்கவும். தொடர்ந்து கீழே உள்ள வேத விண்ணப்பம் செய்ய வேண்டும்.

(1) ஹரி: ஓம்
அக்னிமீடே புரோஹிதம்,
யக்யஸ்யதேவம்ருத்விஜம்,
ஹோதாரம் ரத்னதாதமம்,
ஹரி: ஓம்.

(2) ஹரி: ஓம், ஹரி: ஓம்,
அக்ன ஆயாஹவீதயே,
க்ருணாநோஹவ்யதாதயே,

நிஹோதாத்ஸஸ்யபர்ஹிஷி,
சந்நோதேவீரபிஷ்டயே,
ஆபோபவந்து பீதயே,
சம்யோரபிஷ்டவந்துந:
ஹரி: ஓம்

இதனைத் தொடர்ந்து கீழே உள்ள இராமாயண, பாகவத ச்லோகங்களைக் கூறவும்

(1) இராமாயணம்
தபஸ்வாத்யாயநிரதம் தபஸ்வீவாக்விதாம் வரம்
நாரதம் பரிப்ருச்ச வால்மீகிர் முநி புங்கவம்

(2) ஸ்ரீமத்பாகவதம்
தாஸாமாவிரபூச் செளரி: ஸ்மயமானமுகாம்புஜ:
பீதாம்பரதர: ஸாக்வீஸாக்ஷாந் மன்மதமன்மத:

வைகுண்டேது பரேலோகே ச் ரியாஸார்த்தம் ஜகத்பதி:
ஆஸ்தே விஷ்ணுரசிந்தியாத்மா பக்தைர் பாகவதைஸ்ஸஹ

## அர்ச்சனை

ஓம் கேசவாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் மாதவாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் மதுஸூதநாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் வாமனாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஹ்ருஷீகேசாய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் தாமோதராய நம:

ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம: ஓம்

என்று கூறியபடி பெருமாளுக்கு அர்ச்சனை செய்யவும். தொடர்ந்து மணியைச் ஸேவித்தபடி தீபார்த்தி காண்பிக்கவும்.

## தளிகை ஸமர்ப்பித்தல்

பெருமாளுக்கு முன்பாக ப்ரஸாதங்களை வைத்து, ஓர் உத்தரணி தீர்த்தத்தால் அதனைப் ப்ரோக்ஷிக்கவேண்டும் (அதன் மீதி தீர்த்தத்தை தெளிக்க வேண்டும்). பின்னர் – இதம் போஜ்யாஸனம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி, ஒரு துளசியை பெருமாள் திருமேனியில் ஸமர்ப்பிக்க வேண்டும். தொடர்ந்து பின் வரும் ஸ்லோகத்தைக் கூறவேண்டும்.

ஸெளவர்ணே ஸ்தாலிவர்யே மணிகணகசிதே கோக்ருதாத்தான் ஸூபக்வான்
பக்ஷ்யான் போஜ்யாம் சலேஹ்யாந் பரமமதஹவிஸ் ஸோஷ்யமந்நம் நிதாய
நானாசாகைருபேதம் ததிக்ருத ஸஹிதம் க்ஷீரபாநீய யுக்தம்
தாம்பூலம் சாத்மனேஸ்மை ப்ரதிதிவஸமஹம் மானஸம் கல்பயாமி

தொடர்ந்து மணியைச் ஸேவித்துக் கொண்டு, க்ராஸ முத்திரை செய்து, அஷ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய) கூறியபடி, தளிகையைச் ஸமர்ப்பிக்கவும். தொடர்ந்து அர்க்யம், பாத்யம், ஆசமநீயம் ஸமர்ப்பிக்கவும்.



க்ராஸ முத்ரை

## புனர்மந்திராஸனம்

பழம், வெற்றிலை, பாக்கு முதலானவற்றைப் பெருமாளுக்கு முன்பாக வைத்து, துளசியை எடுத்து – இதம் புனர்மந்திராஸநம் ஸமர்ப்பயாமி – என்று கூறியபடி துளசியை பெருமாளிடம் சேர்க்க வேண்டும்.

## சாத்துமுறை

மணியைச் ஸேவித்துக் கொண்டு, கர்ப்பூரஹாரத்தி செய்தபடி – ஓம் தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதாபச்யந்திஸூரய: திதீவசக்ஷுராததம் தத்விப்ராஸோவிபங்யவோ ஜாக்ருவாரும் ஸஸ்யமிந்ததே விஷ்ணோர்யத்பரமம்பதம் ஓம் – என்று கர்ப்பூரத்தை கீழே சேர்த்து விடவேண்டும். பின்னர் கீழே உள்ள திவ்யப் பிரபந்த சாத்துமுறை செய்யவேண்டும்.

சிற்றஞ் சிறு காலே வந்து உன்னை சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்று – ஏலோ எம்பாவாய்.

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேய் இழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈர் இரண்டு மால் வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா. உன்
சேவடி செவ்வி திருக்காப்பு,
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்ப்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்து உறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே

ஆராத அருள் அமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்கு அளித்த கோயில்
தோராத தனிவீரன் தொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயன் எல்லாம் சேர்க்கும் கோயில்
செழுமறையின் முதல் எழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினை அனைத்தும் தீர்க்கும் கோயில்
திருவரங்கம் எனத் திகழும் கோயில் தானே.

ஸர்வ தேச தஸாகாலே ஷ்வவ்யாஹத பராக்ரமா
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்

ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்வலா
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ

ஸ்ரீமந். ஸ்ரீரங்க ஸ்ரீயமனுபத்ரவா மனுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந். ஸ்ரீரங்க ஸ்ரீயமனுபத்ரவா மனுதிநம் ஸம்வர்த்தய

நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த பரதாயிநே
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்

வாழி இராமானுசப் பிள்ளான் மாதகவால்
வாழும் அணி நிகமாந்த குரு – வாழி அவன்
மாறன் மறையும் இராமானுசன் பாடியமும்
தேறும்படி உரைக்கும் சீர்

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியை தந்தருள்வோன் வாழியே
தண்டமிழ்த்தூப்புல் திருவேங்கடவன் வாழியே

நானிலமும் தான் வாழ நான்மறைகள் தாம் வாழ
மாநகரின் மாறன் மறை வாழ – ஞானியர்கள்
சென்னியணி சேர் தூப்புல் வேதாந்த தேசிகனே.
இன்னமொரு நூற்றாண்டிரும்

வாழியணி தூப்புல் வரு நிகமாந்தாசாரியன்
வாழியவன் பாதாரவிந்த மலர் – வாழியவன்
கோதிலாத் தாண் மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலார் நல்லோர் திறள்

## பர்யங்காஸநம்

மணியைச் ஸேவித்து, ஒரு துளசியை – இதம் பர்யங்காசனம் ஸமர்ப்பயாமி – என்று பெருமாளிடம் ஸமர்ப்பிக்கவும். தொடர்ந்து அர்க்யம், பாத்யம், ஆசமநீயம் ஸமர்ப்பிக்கவும். பெருமாள் திருமேனி மீது உள்ள புஷ்பம், சந்தனம், துளசி முதலானவற்றை சிறிது ப்ரஸாதமாக எடுத்துக் கொள்ளவும். பின்னர் – யோக நித்ராம் குருஷ்வ – என்று உச்சரித்தபடி பெருமாள் பெட்டியை மூட வேண்டும். தொடர்ந்து – ஸர்வ அபராதம் க்ஷமஸ்வ – என்று கூற வேண்டும். இப்படியாக திருவாராதனத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். ப்ரஸாதங்களையும், தீர்த்தத்தையும் அனைவருக்கும் கொடுக்கவேண்டும்.